சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

<u>OS 96/2019</u>

<u>25.02.2026.</u>

<u>DW - 1</u>

<u>பி.வா.சா.1.சூரஜ்குமார், த/பெ.ராஜசேகரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு எப்போது வரி கட்டினேன் என்றால் - பெயர் மாற்றம் ஏற்பட்டதிலிருந்து கட்டி வருகிறேன். எப்போது என்று நினைவில்லை. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி என்ககு தெரியும். வழக்கு சொத்திற்கு சித்ரா தான் வரி கட்டி அவரது தரப்பில் ஆவணம் தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது. வா.சா.ஆ.12 மற்றும் 13 ஆக தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதால் தான் வா.சா.ஆ.12 மற்றும் 13 தீர்வை ரசீதுகள் அவர் பெயரில் செலுத்தி வந்துள்ளார் என்றால் - சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே, 09.10.2018 ம் தேதியன்று சித்ரா அவரது வழக்கறிஞர் மூலமாக மன்னார்குடி நகராட்சி ஆணையர் மற்றும் வட்டாட்சியருக்கு அறிவிப்பு அனுப்பி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இருப்பதால் சொத்துரிமையை மாற்றக்கூடாது என்று அனுப்பியுள்ளார் என்றால் - அதுபற்றி தெரியாது. 09.10.2018 ம் தேதிய அறிவிப்பு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் - அதுபற்றி தெரியாது. வாதி, 2019 ம் ஆண்டு 6 வது மாதத்திலேயே மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் என் பெயரில் உள்ள பத்திரம் செல்லாது என்று ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, நீதிமன்ற உத்தரவில்லாமல் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்பதற்கு விரோதமாக மன்னார்குடி நகராட்சி ஆணையர் மற்றும் வட்டாட்சியர் அவர்கள் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக இருந்தும் விரோதமாக செயல்பட்டுள்ளார்கள் என்றால் - சரியல்ல. நான் தற்போது மேஜரானபின்பு நான் நகராட்சியில் மனு கொடுத்து எனது பெயரில் மாற்ற மனு கொடுத்தேனா என்றால் - கொடுத்தேன். எப்போது கொடுத்தேன் என்றால் - அது தெரியாது. நான் எந்தவிதமான மனுவும் கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரி ரசீதுகள் நீதிமன்ற வழக்கிற்கு பிற்பாடு ஏற்படுத்தப்பட்டவை என்றும் அவைகள் நீதிமன்ற உத்தரவை கட்டப்படுத்தக்கூடியவை அல்ல என்றாலும் - சரியல்ல. மன்னார்குடி வட்டாட்சியரிடம் எப்போது பட்டா மாறுதல் கோரி மனு கொடுத்தேன் என்றால் - பதிவு செய்யப்பட்ட மறுநாளே மனு கொடுத்தேன். எப்போது பத்திரப்பதிவு செய்யப்பட்டது என்றால் - 04.07.2018 தேதியன்று என்று நினைக்கிறேன். 28.04.2025 ம் தேதியன்று வழக்கு நிலுவையில் இருக்கும்போது என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி பட்டா என் பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் - சரியல்ல. 10.04.2025 ம் தேதியன்று தான் நான் பட்டா மாறுதல் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பத்திரப்பதிவு ஏற்பட்டதற்கு மறுநாள் மனு கொடுக்கவில்லை என்றாலும் - சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, மண்டல துணை வட்டாட்சியர் இந்த வழக்கில் தரப்பினராக இருக்கும் நிலையில் பட்டா மாறுதல் செய்வதற்கு அவருக்கு உரிமை கிடையாது என்றாலும் அவ்வாறு மாற்றம் செய்தது நீதிமன்ற உத்தரவை கட்டுப்படுத்தாது என்றால் - சரியல்ல. சித்ரா பெயரும் கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றால் - சரிதான். என் பெயரில் மாற்றுவதற்கு மனு கொடுத்துள்ளேன். அவ்வாறு நான் மனு கொடுத்ததை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில், சித்ரா மன்னார்குடி நகராட்சி, தனி வட்டாட்சியர் மற்றும் எனது அப்பாவிற்கு கொடுத்த அறிவிப்பிற்கு தான் பதில் அறிவிப்பு கொடுப்பதாக கூறியுள்ளேன் என்றால் - சரிதான். இந்த வழக்கில், அ.வ.எண்.38/2013 என்ற வழக்கு எனது அம்மாவிற்கும் இந்த வழக்கின்

வாதிக்கும் இடையேயான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். ஒரு சொத்து சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, எங்கள் இருவருக்கும் இடையே சுமூகமான உறவு இல்லாத நிலையில் வாதியிடமிருந்து கிரயம் பெறவே வாய்ப்பில்லை என்றால் - சரியல்ல. சுமூகமான உறவு இருந்தது. அவர்கள் வீட்டு விசேஷத்தில் கலந்துக்கொண்டு சீர் செய்துள்ளோம். அவ்வாறு நாங்கள் எந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ளவில்லை என்றாலும் சீரும் செய்யவில்லை என்றாலும் - சரியல்ல. வாதி, பொருளாதார ரீதியாக நல்லநிலையில் இருக்கும்போது வழக்கு சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் - சரியல்ல. கடனில் இருப்பதாகவும் குடும்ப சொத்து வெளியில் செல்லக்கூடாது என்பதற்காக எங்களிடம் விற்றார்கள். வாதி யாரிடம் கடன் வாங்கினார்கள் என்றால் - வெளி நபரிடம் வாங்கினார். அவ்வாறு வெளிநபரிடம் கடன் வாங்கியது எனக்கு தெரியும். எப்போது வாங்கினார் என்று தெரியாது. நான் சொல்வதுபோல் வாதிக்கு சொத்தை விற்கவேண்டிய அவசியம் கிடையாது என்றால் - சரியல்ல. அ.வ.எண்38/2013 வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் காரணத்தினால் தான் சொத்தை எப்படியாவது அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் சொத்தை கிரயம் வாங்கினேன் என்றாலும் மேற்படி அசல் வழக்கை வாபஸ் வாங்க வைக்க வேண்டும் என்பதால் தான் போலியான ஆவணத்தை தயாரித்துள்ளோம் என்றால் - சரியல்ல. எனது எதிர் வழக்குரையில், எங்கள் தரப்பினருக்கும் வாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்பதை ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் - சரியல்ல. வாதிக்கு சொந்தமான சொத்தை எனக்கு வேண்டப்பட்டவரான சீனிவாசனை வைத்து பொது அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்டுவிட்டதால் அவசர அவசரமாக ஒரு போலியான ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் - சரியல்ல. எனது எதிர் வழக்குரையில், பவர் நடைமுறையில் இருந்ததாக சொல்லியிருப்பது தவறு என்றாலும் அந்த பவர் பத்திரமானது 29.06.2018 ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டு 02.07.2018 ம் தேதியன்று சீனிவாசன் அதனை பெற்றுக்கொண்டுள்ளார் என்ற விவரம் தெரிந்துக்கொண்டு 04.07.2018 ம் தேதியன்று பதத்திரப்பதிவு செய்துள்ளோம் என்றால் - சரியல்ல. சொத்து வாங்குவதாக இருந்தால் சொத்திற்கு வில்லங்கம் இருக்கிறதா என்று சரிபார்க்கவேண்டும் என்பதன் அடிப்படையில் நாங்கள் சொத்து வாங்கியதாக சொல்லப்படும் 04.07.2018 க்கு முன்னரோ அல்லது பின்னரோ வில்லங்கம் இருப்பதாக பார்த்தாக எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. உறவினர் என்ற அடிப்படையில் கிரயம் வாங்கினோம் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. வாதிக்கும் எங்களுக்கும் சுமூகமான உறவு இல்லாதபோது வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதால் தான் போலியான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் - சரியல்ல. பி.வா.ஆ.5 ஆவணமான, வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தவறானது என்றால் - சரியல்ல. கிரயம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தில் எனது தகப்பனாரின் அப்பாதான் சொத்தில் இருந்து வருகிறார் என்றால் - அவர் இருக்கும்வரையில் இருக்கட்டும் என்று இருந்தோம். இந்த வழக்கில் சாட்சிய விசாரணை நடக்கும்போதுதான் வழக்கு சொத்திற்கான மின்கட்டண ரசீதை நான் செலுத்தியுள்ளேன் என்றால் - சரியல்ல. இந்த வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்ததற்கு பிறகு தீர்வை செலுத்தியுள்ளேன் என்றால் - 09.01.2026 ல் கட்டியுள்ளேன். இந்த தீர்வை ரசீதை வைத்து வழக்கின் உரிமையை நிலைநாட்ட முடியாது என்றால் - சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணமானது, வழக்கு நிலுவையில் இருக்கும்போது 03.10.2025 ம் தேதியன்று ஆன்லைனில் செலுத்தியுள்ளேன் என்றால் - சரிதான். முதலிலிருந்து நாங்கள் தான் கட்டி வருகிறோம். எப்போதிலிருந்து நான் கட்டி வருகிறேன் என்றால் - 04.07.2018 முதல் கட்டி வருகிறேன். எந்த தேதியில் என் பெயரில் கிரயம் செய்யப்பட்டது என்றால் - என் தகப்பனார் மனு கொடுத்து மாற்றம் செய்யப்பட்டது. என் தகப்பனார் எப்போது மனு கொடுத்தார் என்றால் - தெரியவில்லை. நான் சொல்வதுபோன்று என் தகப்பனார் மனு கொடுத்திருந்தால் மைனர்

சூரஜ்குமார் என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் - சரியல்ல. நான் சொல்வது போன்று மேற்கண்ட தேதியில் என் தந்தையால் மனு கொடுக்கப்படவில்லை என்றால் - சரியல்ல. பொதுவாக சொத்து யார் அனுபவத்தில் உள்ளதோ அவர்கள் தான் மின்கட்டண ரசீது செலுத்துவார்கள் என்றால் - சரிதான். அந்த வகையில் என் தாத்தா தீர்வை கட்டி வந்தார் என்றால் - சரியல்ல. மன்னார்குடி, கம்மாள தெரு என்பது தங்க நகைகளை விற்க வாங்கக்கூடிய கடைகள் அதிகம் உள்ள தெரு என்றால் - சரிதான். அந்த தெருவில் வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் போலியான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் அதற்கான பிரதிபலனை நானோ எனது பவர் ஏஜெண்ட்டோ வாதிக்கு செலுத்தவில்லை என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்தின் சந்தை மதிப்பீடு அதிகமாக உள்ளது என்றால் - அது பற்றி தெரியாது. சித்ரா பணம் வாங்கிக்கொண்டதாக என்னிடம் நேரடியாக சொல்லவில்லை என்றால் - சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 முதல் மற்ற ஆவணங்களும் உண்மையான சாசனத்தை நிருபிக்க வேண்டும் என்றால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அதற்கான காரணத்தையும் சொல்லவில்லை என்றால் - உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் ஆவணம் இருப்பதால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தள்ளுபடி ஆகி 7 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றாலும் அங்கும் நான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் - சரியல்ல. எனது நிருபண ஆணையுறுதி ஆவணத்திலும் உரிமையியல் நீதிமன்றத்தில அசல் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பதால் தான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறவில்லை என்றால் - சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.25 17:57:36 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.